# 2025 – வருடம் செப்டம்பர் மாதம் 30–ம் நாள் செவ்வாய்க் கிழமை காலை 11.00 மணிக்கு நகராட்சி மன்ற கூட்ட அரங்கில் நடந்தேரிய சாதாரண கூட்டத்தின் கூட்ட நடவடிக்கைகள்

## தலைமை :– திருமதி. எம். சுசீலா, நகரமன்ற தலைவர்

**1. ந.க.எண்.எச்2/2025**

இந்நகராட்சியில் 2025ம் ஆண்டு ஆகஸ்ட்–2025ம் மாதம் பிறப்பு மற்றும் இறப்பு விவரங்கள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பதிவு செய்யப்பட்ட பிறப்புகள் | – | 10 |
| பதிவு செய்யப்பட்ட இறப்புகள் | – | 11 |

**அ.கு: மன்றம் பதிவு செய்யலாம்.**
**தீர்மானம் – பதிவு செய்யப்பட்டது**

**2. ந.க.எண். 1688/2025/ எச்1**

திருப்பூர், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.2452/2023/பி1, நாள்.16.09.2025 உத்திரவில், தூய்மை இந்தியா திட்டம் 2.0 (நகர்புறம்) Safaimitra Suraksh Shehar திட்டத்தின் கீழ் நகராட்சிகளில் பணிபுரிந்து வரும் தூய்மை பணியாளர்களின் பாதுகாப்பினை உறுதி செய்யும் பொருட்டு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களின் அலுவலகத்தில் உள்ள 24X7 தொலைபேசி உதவி மையம் Call Centre for Helpline 14420 அமைக்கப்பட்டு உதவி மையத்திற்கு தேவையான பணியாளர்கள், வெளிக்கொணர்வு முகமை அடிப்படையில் பணியாளர்களை நியமித்து ஆண்டு பராமரிப்பு தொகை மற்றும் பணியாளர்களுக்கு ஊதியம் வழங்கும் பொருட்டு நகராட்சி வாரியாக தொகையினை நிர்ணயம் செய்யப்பட்டு தொகையினை செலுத்துமாறு உத்திரவிடப்பட்டுள்ளது.
எனவே நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களின் அலுவலத்தில் செயல்பட்டுவரும் Call Centre for Helpline 14420 MENTOR INFOCOMM நிறுவனத்தின் இலவச தொலைபேசி மையத்தில் பணிபுரிந்து வரும் பணியாளர்களுக்கான ஊதியம் ரூ.41,335/– யை இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்கவும் தொகையினை Axis வங்கி கணக்கில் செலுத்தவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு :மன்றம் அனுமதி வழங்கலாம்.**
**தீர்மானம் – அனுமதி வழங்கப்பட்டது.**

**3. ந.க.எண்.2042/2020/எச்2**

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 பிரிவு 199–ன்படியும் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள், 2023 அத்தியாயம் XI பிரிவு IV படியும் குன்னூர் நகராட்சியில் சட்டப்படி வரையறுக்கப்பட்ட எல்லைக்குள் உள்ள கட்டிடங்களில் கழிவறைகள் மற்றும் நச்சுத் தொட்டிகள் கட்டுதல், பராமரித்தல் மற்றும் இவற்றில் இருந்து பெறப்படும் கசடு கழிவுகளை பாதுகாப்பான முறையில் சேகரித்து இடம் பெயர்த்தல் மற்றும் அகற்றுதல் ஆகிய பணிகளில் ஈடுபடுவோர்களுக்கான பாதுகாப்பை உறுதி படுத்துதல் தொடர்பான பணிகளுக்கு அடிப்படை கட்டமைப்பு விதிகளை ஏற்படுத்த பொறுப்பு

நிர்ணயித்தும், குன்னூர் நகராட்சி பகுதிகளில் கழிவுநீர் நச்சுத் தொட்டியில் இருந்து கழிவுகளை உரிய விதிகளின்படி பாதுகாப்பான முறையில் அகற்ற தனியார் கழிவுநீர் அகற்றும் வாகனங்களுக்கு உரிமம் வழங்கி முறைப்படுத்தவும், பாதுகாப்பற்ற முறையில் கழிவுநீர் நச்சுத் தொட்டியை சுத்தம் செய்ய அனுமதிப்போர் மீதான தண்டனை ஏற்படுத்துதல் தொடர்பாக நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அதிகாரத்திற்குட்பட்டு காடுகழிவு மற்றும் கழிவுநீர் மேலாண்மை துணை விதிகள் (திருத்தம்) 2024ல் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேற்கண்ட கசடுகழிவு மற்றும் கழிவுநீர் மேலாண்மை துணை விதிகள் இந்நகர்மன்றத்தில் தீர்மான எண்.1388, நாள்.30.07.2025 அன்று இயற்றப்பட்டு இந்நகராட்சி விளம்பரப் பலகையில் விளம்பரம் செய்யப்பட்டும், தினசரி நாளிதழான தினகரனில் 02.08.2025 அன்று பிரசுரம் செய்யப்பட்டது. இதில் ஏதேனும் ஆலோசனை மற்றும் ஆட்சேபனை இருப்பின் 15 நாட்களுக்குள் நகராட்சி ஆணையருக்கு எழுத்து மூலமாகவோ அல்லது மின்னஞ்சல் முகவரி commr.cnr@gmail.com மூலமாகவோ தெரிவித்துக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டது. அறிவிப்பு வெளியிடப்பட்டு 15 தினங்களுக்குள் ஆட்சேபனைகள் ஏதும் வரப்படவில்லை. எனவே கசடுகழிவு மேலாண்மை துணை விதிகளை மாவட்ட அரசிதழில் வெளியிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு :

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மாவட்ட அரசிதழில் வெளியிட அரசு அச்சகத்திற்கு செலுத்த வேண்டிய தொகையினையும் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் – அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது**

**4. ந.க.எண்.217/2023/எச்1**

இந்நகராட்சிக்கு சொந்தமான ஆடு மாடு வதை சாலைக்கு தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் இசைவாணையை பெறுவதற்கு 2021–2022 முதல் 2026–2027ஆம் ஆண்டு வரை ரூ.146000/– யை மேற்படி தொகையினை அலுவலகத்திற்கு செலுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட தொகையினை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்திற்கு செலுத்த இந்நகராட்சி பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு :மன்றம் அனுமதி வழங்கலாம்.**
**தீர்மானம் – அனுமதி வழங்கப்பட்டது**

**5. ந.க.எண்.1908/2025/எச்2**

இந்நகராட்சியில் பணிபுரிந்து வரும் தூய்மை பணியாளர்கள், துப்புரவு பணி மேற்பார்வையாளகள், அலுவலக உதவியாளர்கள் மகப்பேறு ஆயாக்கள் பெண் தூய்மைபணியாளர்கள், (மகப்பேறு மையம்), குடிநீர் விநியோக பணியாளர்கள், இரவு காவலர்கள், மற்றும் ஓட்டுநர்கள் ஆகிய பணியாளர்களுக்கு எதிர்வரும் தீபாவளி பண்டிகை முன்னிட்டு சீருடைகள் மற்றும் டர்பன் கிளாத் துண்டுகள் வாங்கி வழங்க வேண்டியுள்ளதாலும், மேலும் பணியாளர்களின் தையல் கூலி கட்டணம் வழங்க வேண்டி

உள்ளதால் அதற்குண்டான உத்தேச செலவினம் ரூ.4.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு :மன்றம் அனுமதி வழங்கலாம்.**
**தீர்மானம் – அனுமதி வழங்கப்பட்டது**

**6 . ந.க.எண்.இ2/2025**

இந்நகராட்சிக்குட்பட்ட 30 வார்டுகிளில் உள்ள தெரு விளக்குகளில் 250w மற்றும் 125W சோடியம் ஆவி விளக்குகள் உள்ளது. மொத்தம் 794 சோடியம் ஆவி விளக்குகள் இருந்தது அவற்றில் 345 சோடியம் ஆவி விளக்குகளை அகற்றி 90wLED Lights பொருத்தப்பட்டுள்ளது. மீதியுள்ள 449 சோடியம் ஆவி விளக்குகளை 90w LED விளக்குகளாக மாற்ற மன்ற அனுமதியும்

மேலும் ரூபாய் 20,00,000 இலட்சத்திற்கு 90w LED விளக்குகள் வாங்கி பொருத்த தெரு விளக்குகளை பராமரித்து வரும் நிறுவனமாக இஸ்னெல் எனர்ஜீ எக்யூல் மெண்டஸ் பிரைவிட் லிமிடெட் நிறுவனத்தின் மூலம் பணிகள் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு :மன்றம் அனுமதி வழங்கலாம்.**
**தீர்மானம் – அனுமதி வழங்கப்பட்டது**

**7 . ந.க.எண்.இ2/2025**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.9 மெயின் ஆழ்வார் பேட்டை பகுதியில் போக்குவரத்திற்கும் மக்கள் நடப்பதற்கும் மின் கம்பம் இடையூறாக உள்ளது. ஆகவே அம்மின் கம்பத்தை சாலையின் ஓரமாக மாற்ற அமைக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு :மன்றம் அனுமதி வழங்கலாம்.**
**தீர்மானம் – அனுமதி வழங்கப்பட்டது**

**8 . ந.க.எண். இ2/2025**

இந்நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண்.03 ஆப்பிள் பீ பகுதியில் உள்ள உயர் கோபுர மின் விளக்கு (High mash light) உள்ள Steel Rope மற்றும் Gear Box மிகவும் பழுந்தடைந்துள்ளது. மிகவும் ஆபத்தாக உள்ளதால் அவற்றை சரி செய்ய உத்தேச ரூ.60,000/– மதிப்பீடுத்தொகை ஆகும். ஆகவே அதனை சரி செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூபாய் 60000 மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு :மன்றம் அனுமதி வழங்கலாம்.**
**தீர்மானம் – அனுமதி வழங்கப்பட்டது**

9 . ந.க.எண். இ2/2025

குன்னூர் நகராட்சிக்குட்பட்ட வார்டுஎண்.30 சித்திவிநாயகர் கோயில் தெரு பகுதியில் மூடியுடன் கூடிய மழைநீர்வாடிகால் மற்றும நடைபாதை அமைக்கும் பணி ரூ.15.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு **நகர மன்ற தீர்மானஎண்**. 1281, **நாள்**. 28.02.2025**ல் அனுமதி பெறப்பட்டு** 22.08.2025 **அன்று முதல் அழைப்பில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளைக் கொண்டு ஒப்பு நோக்குப்பட்டியல் தயார் செய்து மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது**.

| **வரிசை எண்** | **ஒப்பந்ததாரரின் பெயர்** | **தொகை விகிதம்** |
|---|---|---|
| 1 | **திரு.நாராயணமூர்த்தி** | 0.33 % **அதிகம்** |
| 2 | **திரு.கே.ஜெயராம்** | 0.04 % **குறைவு** |

குன்னூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.30 சித்தி விநாயகர் கோயில் தெரு பகுதியில் மூடியுடன் கூடிய மழைநீர் வாடிகால் மற்றும நடைபாதை அமைக்கும் பணி மேற்கொள்ள **மதிப்பீட்டை விட** 0.04% **குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.கே.ஜெயராம் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது**.

**அ.கு :மன்றம் அனுமதி வழங்கலாம்.**
**தீர்மானம் – அனுமதி வழங்கப்பட்டது**

10. ந.க.எண். இ4/0097/2024

குன்னூர் நகராட்சிக்குட்பட்ட வார்டுஎண்.29 காந்திபுரம் பகுதியில் நகர் நல மையத்திற்கு நச்சுத்தொட்டி (Septic Tank) மற்றும் கூடுதல் பணி மேற்கொள்ளுதல் ரூ.9.50 இலட்சம் மதிப்பீட்டில் நகரமன்ற தீர்மான எண்.1172 நாள்.24.12.2024ல் அனுமதி பெறப்பட்டு 22.08.2025 அன்று முதலாம் அழைப்பில் ஒப்பந்தப்புள்ள கோரியதில் பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளைக்கொண்டு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| **வரிசை எண்** | **ஒப்பந்ததாரரின் பெயர்** | **தொகை விகிதம்** |
|---|---|---|
| 1 | **திரு.மாதேஷ்ராஜன்** | 0.02 % **குறைவு** |
| 2 | **திரு.சரவணக்குமார்** | 0.08 % **அதிகம்** |

குன்னூர் நகராட்சிக்குட்பட்ட வார்டுஎண்.29 காந்திபுரம் பகுதியில் நகர் நல மையத்திற்கு நச்சுத்தொட்டி (Septic Tank) மற்றும் கூடுதல் பணி மேற்கொள்ள **மதிப்பீட்டை விட** 0.02% **குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.மாதேஷ்ராஜன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது**.

**அ.கு :மன்றம் அனுமதி வழங்கலாம்.**
**தீர்மானம் – அனுமதி வழங்கப்பட்டது**

**11. ந.க.எண். இ4/0097/2024**

குன்னூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.17 உமரிக்காட்டேஜ் பகுதியில் கதவு எண்.49 முதல் 68 வரை நடைபாதை முற்றிலும் பழுதடைந்து பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. எனவே நடைபாதையினை சீரமைக்கும் பணி மேற்கொள்ள ரூ.1.70 இலட்சம் மதிப்பீட்டிற்கு **நகரமன்ற தீர்மான எண்**. 1205, **நாள்**.29.01.2025**ல் அனுமதி பெறப்பட்டு** 09.04.2025 **அன்று முதல் அழைப்பில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பெறப்பட்ட ஒரு ஒப்பந்தப்புள்ளிகளைக் கொண்டு ஒப்பு நோக்குப்பட்டியல் தயார் செய்து மன்றத்தின் முடிவற்கு வைக்கப்படுகிறது**.

| **வரிசை எண்** | **ஒப்பந்ததாரரின் பெயர்** | **தொகை விகிதம்** |
|---|---|---|
| 1 | **திரு.சரவணகுமார்** | 0.04 % **அதிகம்** |
| 2 | **திரு.நாராயணமூர்த்தி** | 0.01 % **குறைவு** |

குன்னூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.17உமரிக்காட்டேஜ் பகுதியில் கதவு எண்.49 முதல் 68 வரை நடைபாதை சீரமைக்கும் பணி மேற்கொள்ள **மதிப்பீட்டை விட** 0.01% **குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.நாராயணமூர்த்தி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது**.

**அ.கு :மன்றம் அனுமதி வழங்கலாம்.**
**தீர்மானம் – அனுமதி வழங்கப்பட்டது**

**12. ந.க.எண். இ4/0097/2024**

குன்னூர் நகராட்சிக்குட்பட்ட குன்னூர் பேருந்து நிலையத்தின் எதிர்புறத்தில் பயணியர் நிழற்குடை அமைக்கவும் ஈரோக்கான் டைல்ஸ், மின்விளக்குகள் மற்றும் பெயர் அமைக்கும் பணி மேற்கொள்ளுதல் ரூ.28.00 இலட்சம் மதிப்பீட்டில் **நகரமன்ற தீர்மான எண்**. 1280, **நாள்**.28.02.2025**ல் அனுமதி பெறப்பட்டு** 22.08.2025 **அன்று முதல் அழைப்பில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளைக் கொண்டு ஒப்பு நோக்குப்பட்டியல் தயார் செய்து மன்றத்தின் முடிவற்கு வைக்கப்படுகிறது**.

| **வரிசை எண்** | **ஒப்பந்ததாரரின் பெயர்** | **தொகை விகிதம்** |
|---|---|---|
| 1 | **திரு.மாதேஷ்ராஜன்** | 0.22 % **அதிகம்** |
| 2 | **திரு.சரவணகுமார்** | 0.12 % **குறைவு** |

குன்னூர் நகராட்சிக்குட்பட்ட குன்னூர் பேருந்து நிலையத்தின் எதிர்புறத்தில் பயணியர் நிழற்குடை அமைக்கவும் ஈரோக்கான் டைல்ஸ், மின்விளக்குகள் மற்றும் பெயர் அமைக்கும் பணி மேற்கொள்ள **மதிப்பீட்டை விட** 0.12% **குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.சரவணகுமார் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது**.

**அ.கு :மன்றம் அனுமதி வழங்கலாம்.**
**தீர்மானம் – அனுமதி வழங்கப்பட்டது**

13. ந.க.எண். இ4/0097/2024

குன்னூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 06ல் கான்வெண்டு பள்ளி சாலையை சீரமைக்கும் பணி ரூ.3.40 இலட்சம் மதிப்பீட்டில் **நகரமன்ற தீர்மான எண்**. 1107, **நாள்**.29.11.2024**ல் அனுமதி** பெறப்பட்டு 22.08.2025 **அன்று முதல் அழைப்பில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளைக் கொண்டு ஒப்பு நோக்குப்பட்டியல் தயார் செய்து மன்றத்தின் முடிவற்கு வைக்கப்படுகிறது**.

| **வரிசை எண்** | **ஒப்பந்ததாரரின் பெயர்** | **தொகை விகிதம்** |
|---|---|---|
| 1 | **திரு.முகமது** | 0.02 % **குறைவு** |
| 2 | **திரு.முனாப்** | 0.10 % **அதிகம்** |

குன்னூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 06ல் கான்வெண்டு பள்ளி சாலையை சீரமைக்கும் பணி மேற்கொள்ள **மதிப்பீட்டை விட** 0.02% **குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.முகமது அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது**.

**அ.கு :மன்றம் அனுமதி வழங்கலாம்.**
**தீர்மானம் – அனுமதி வழங்கப்பட்டது**

14. ந.க.எண். இ4/0097/2024

குன்னூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 19 மவுண்ட் சாலை முதல் தந்தி மாரியம்மன் கோயில் தெரு வரை மழைநீர் வடிகால் மற்றும் கான்கீரிட் நடைபாதை அமைக்கும் பணி ரூ.2.80 இலட்சம் மதிப்பீட்டில் **நகரமன்ற தீர்மான எண்**. 1095, **நாள்**.29.11.2024**ல் அனுமதி** பெறப்பட்டு 22.08.2025 **அன்று முதல் அழைப்பில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளைக் கொண்டு ஒப்பு நோக்குப்பட்டியல் தயார் செய்து மன்றத்தின் முடிவற்கு வைக்கப்படுகிறது**.

| **வரிசை எண்** | **ஒப்பந்ததாரரின் பெயர்** | **தொகை விகிதம்** |
|---|---|---|
| 1 | **திரு.ஜெயராம்** | 0.03 % **குறைவு** |
| 2 | **திரு.நாராயணமூர்த்தி** | 0.40 % **அதிகம்** |

குன்னூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 19 மவுண்ட் சாலை முதல் தந்தி மாரியம்மன் கோயில் தெரு வரை மழைநீர் வடிகால் மற்றும் கான்கீரிட் நடைபாதை அமைக்கும் பணி மேற்கொள்ள **மதிப்பீட்டை விட** 0.03% **குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.ஜெயராம் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது**.

**அ.கு :மன்றம் அனுமதி வழங்கலாம்.**
**தீர்மானம் – அனுமதி வழங்கப்பட்டது**

15. ந.க.எண். இ4/0097/2024

குன்னூர் நகராட்சிக்குட்பட்ட குன்னூர் மார்க்கெட் பகுதியில் புதிய கடைகள் அமைப்பதற்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு மேலும் பழைய கடைகளை அகற்றும் பணி நடைபெற உள்ளதால் தற்போது உழவர் சந்தையில் மாற்று ஏற்படாக தற்காலிக கடைகள் நகர்புற சுகாதார மையக்கட்டிடத்தின் அருகில் அமைக்கும் பணி மேற்கொள்ள ரூ.40.00 இலட்சம் மதிப்பீட்டில் **நகரமன்ற தீர்மான எண்**. 1232, **நாள்**.29.01.2025**ல் அனுமதி பெறப்பட்டு** 22.08.2025 **அன்று முதல் அழைப்பில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளைக் கொண்டு ஒப்பு நோக்குப்பட்டியல் தயார் செய்து மன்றத்தின் முடிவற்கு வைக்கப்படுகிறது**.

| **வரிசை எண்** | **ஒப்பந்ததாரரின் பெயர்** | **தொகை விகிதம்** |
|---|---|---|
| 1 | **திரு.மாதேஷ்ராஜன்** | 2.19 % **குறைவு** |
| 2 | **திரு.சரவணக்குமார்** | 0.77 % **குறைவு** |

குன்னூர் நகராட்சிக்குட்பட்ட குன்னூர் மார்க்கெட் பகுதியில் புதிய கடைகள் அமைப்பதற்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு மேலும் பழைய கடைகளை அகற்றும் பணி நடைபெற உள்ளதால் தற்போது உழவர் சந்தையில் மாற்று ஏற்படாக தற்காலிக கடைகள் நகர்புற சுகாதார மையக்கட்டிடத்தின் அருகில் அமைக்கும் பணி மேற்கொள்ள **மதிப்பீட்டை விட** 2.19% **குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.மாதேஷ்ராஜன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டடப்படுகிறது**.

**அ.கு :மன்றம் அனுமதி வழங்கலாம்.**
**தீர்மானம் – அனுமதி வழங்கப்பட்டது**

16. ந.க.எண்.இ4/0097/2024

குன்னூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.26 மிஷன்ஹில் பகுதியில் ஒமேகா வீடு முதல் நந்தகுமார் வீடு வரை நடைபாதை மற்றும் மழை நீர்வடிகால் சீரமைக்கும் பணி ரூ.7.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு **நகர மன்ற தீர்மானஎண்**. 1078, **நாள்**. 29.10.2024**ல் அனுமதி பெறப்பட்டு** 16.09.2025 **அன்று முதல் அழைப்பில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளைக் கொண்டு ஒப்பு நோக்குப்பட்டியல் தயார் செய்து மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது**.

| **வரிசை எண்** | **ஒப்பந்ததாரரின் பெயர்** | **தொகை விகிதம்** |
|---|---|---|
| 1 | **திரு.கே.எஸ்.வெங்கடாசலம்** | 0.33% **அதிகம்** |
| 2 | Essar Construction | 0.04% **குறைவு** |

குன்னூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.26 மிஷன்ஹில் பகுதியில் ஒமேகா வீடு முதல் நந்தகுமார் வீடு வரை நடைபாதை மற்றும் மழை நீர்வடிகால் சீரமைக்கும் பணி மேற்கொள்ள **மதிப்பீட்டை விட** 0.04% **குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள** Essar Construction **நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டடப்படுகிறது**.

**அ.கு :மன்றம் அனுமதி வழங்கலாம்.**
**தீர்மானம் – அனுமதி வழங்கப்பட்டது**

**17. ந.க.எண். இ4/0097/2024**

குன்னூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.20ல் ரேலிகாம்பவுண்ட் பகுதியில் கதவு எண்.25 முதல் மெயின் சாலை வரை மற்றும் ராக்பை சாலை முதல் ரேலிகாம்பவுண்ட் சாலை வரை நடைபாதை அமைக்கும் பணி ரூ.4.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு **நகர மன்ற தீர்மானஎண்**. 1304, **நாள்**. 28.03.2025**ல் அனுமதி பெறப்பட்டு** 16.09.2025 **அன்று முதல் அழைப்பில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளைக் கொண்டு ஒப்பு நோக்குப்பட்டியல் தயார் செய்து மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது**.

| **வரிசை எண்** | **ஒப்பந்ததாரரின் பெயர்** | **தொகை விகிதம்** |
|---|---|---|
| 1 | **திரு.கே.எஸ்.வெங்கடாசலம்** | 0.02 %**குறைவு** |
| 2 | Essar Construction | 0.04 %**அதிகம்** |

குன்னூர் நகராட்சிக்குட்பட்ட வார்டுஎண்.20ல் ரேலிகாம்பவுண்ட் பகுதியில் கதவு எண்.25 முதல் மெயின் சாலை வரை மற்றும் ராக்பை சாலை முதல் ரேலிகாம்பவுண்ட் சாலை வரை நடைபாதை அமைக்கும் பணி மேற்கொள்ள **மதிப்பீட்டை விட** 0.02 % **குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.கே.எஸ்.வெங்கடாசலம் அவர்களின் ஒப்பந்தப் புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது**.

**அ.கு :மன்றம் அனுமதி வழங்கலாம்.**
**தீர்மானம் – அனுமதி வழங்கப்பட்டது**

**18. ந.க.எண். இ4/0097/2024**

குன்னூர் நகராட்சிக்குட்பட்ட வார்டுஎண்.08ல் வண்டி சோலை பகுதியில் தடுப்புச்சுவர் அமைக்கும் பணி ரூ.6.75 இலட்சம் மதிப்பீட்டிற்கு **நகர மன்ற தீர்மானஎண்**. 1253, **நாள்**. 28.02.2025**ல் அனுமதி பெறப்பட்டு** 16.09.2025 **அன்று முதல் அழைப்பில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளைக் கொண்டு ஒப்பு நோக்குப்பட்டியல் தயார் செய்து மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது**.

| **வரிசை எண்** | **ஒப்பந்ததாரரின் பெயர்** | **தொகை விகிதம்** |
|---|---|---|
| 1 | **திரு.ஆர்.சரவணக்குமார்** | 0.02 %**குறைவு** |
| 2 | **திரு.V.S.மாதேஸ்** | 0.05 %**அதிகம்** |

குன்னூர் நகராட்சிக்குட்பட்ட வார்டுஎண்.08ல் வண்டி அக்கதை பகுதியில் தடுப்புச்சுவர் அமைக்கும் பணி மேற்கொள்ள **மதிப்பீட்டை விட** 0.02% **குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.ஆர்.சரவணக்குமார் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது**.

**அ.கு :மன்றம் அனுமதி வழங்கலாம்.**
**தீர்மானம் – அனுமதி வழங்கப்பட்டது**

19. ந.க.எண். இ4/0097/2024

குன்னூர் நகராட்சிக்குட்பட்ட வார்டுஎண்.28ல் உள்ள ஜெமினி டெண்ட்ஹில் சாலையை சீரமைக்கும் பணி ரூ.12.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு **நகர மன்ற தீர்மானஎண்**. 1231, **நாள்**. 29.01.2025**ல் அனுமதி பெறப்பட்டு** 16.09.2025 **அன்று முதல் அழைப்பில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளைக் கொண்டு ஒப்பு நோக்குப்பட்டியல் தயார் செய்து மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது**.

| வரிசை எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | தொகை விகிதம் |
|---|---|---|
| 1 | **திரு.முணாப்** | 0.06 %**குறைவு** |
| 2 | **திரு.**D.**முகமது** | 0.30 %**அதிகம்** |

குன்னூர் நகராட்சிக்குட்பட்ட வார்டுஎண்.28ல் உள்ள ஜெமினி டெண்ட்ஹில் சாலையை சீரமைக்கும் பணி மேற்கொள்ள **மதிப்பீட்டை விட** 0.06% **குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.முணாப் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது**.

**அ.கு :மன்றம் அனுமதி வழங்கலாம்.**
**தீர்மானம் – அனுமதி வழங்கப்பட்டது**

20.ந,க,எண்இ4/0097/2024

குன்னூர் நகராட்சிக்குட்பட்ட வார்டுஎண்.19ல் மவுண்ட்ரோடு பகுதியில் உள்ள கழிவறை மராமத்துப்பணிகள் மேற்கொள்ள ரூ.2.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு **நகர மன்ற தீர்மானஎண்**. 1351, **நாள்**. 28.05.2025**ல் அனுமதி பெறப்பட்டு** 16.09.2025 **அன்று முதல் அழைப்பில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளைக் கொண்டு ஒப்பு நோக்குப்பட்டியல் தயார் செய்து மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது**.

| வரிசை எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | தொகை விகிதம் |
|---|---|---|
| 1 | **திரு.ஜெயராம்** | 0.06 %**குறைவு** |
| 2 | **திரு.நாராயணமூர்த்தி** | 0.86 %**அதிகம்** |

குன்னூர் நகராட்சிக்குட்பட்ட வார்டுஎண்.19ல் மவுண்ட்ரோடு பகுதியில் உள்ள கழிவறை மராமத்துப்பணிகள் மேற்கொள்ள **மதிப்பீட்டை விட** 0.06% **குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள** திரு.கே.ஜெயராம் **அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது**.

**அ.கு :மன்றம் அனுமதி வழங்கலாம்.**
**தீர்மானம் – அனுமதி வழங்கப்பட்டது**

21. ந.க.எண்இ4/0097/2024

குன்னூர் நகராட்சிக்குட்பட்ட வார்டுஎண்.21ல் லீமா நர்சரி பகுதியில் கதவு எண்.1–1/1 முதல் கதவு எண்.197 வரை உள்ள நடைபாதை மற்றும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி மேற்கொள்ள ரூ.8.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு **நகர மன்ற தீர்மானஎண்**. 1303, **நாள்**. 28.03.2025**ல் அனுமதி** பெறப்பட்டு 16.09.2025 **அன்று முதல் அழைப்பில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளைக் கொண்டு ஒப்பு நோக்குப்பட்டியல் தயார் செய்து மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது**.

| **வரிசை எண்** | **ஒப்பந்ததாரரின் பெயர்** | **தொகை விகிதம்** |
|---|---|---|
| 1 | **திரு.ஜெயராம்** | 0.03 %**குறைவு** |
| 2 | **திரு.நாராயணமூர்த்தி** | 0.30 %**அதிகம்** |

குன்னூர் நகராட்சிக்குட்பட்ட வார்டுஎண்.21ல் லீமா நர்சரி பகுதியில் கதவு எண்.1–1/1 முதல் கதவு எண்.197 வரை உள்ள நடைபாதை மற்றும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி மேற்கொள்ள **மதிப்பீட்டை விட** 0.03 % **குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.கே.ஜெயராம் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது**.

**அ.கு :மன்றம் அனுமதி வழுங்கலாம்.**
**தீர்மானம் – அனுமதி வழுங்கப்பட்டது**

22. ந.க.எண்இ4/0097/2024

குன்னூர் நகராட்சிக்குட்பட்ட வார்டுஎண்.20ல் மாடல்ஹவுஸ் பகுதியில் நகராட்சி சொந்தமான குடியிருப்பு எண்.380 மற்றும் 381 குடியிருப்பை பராமரிக்க பணி மேற்கொள்ள ரூ.9.90 இலட்சம் மதிப்பீட்டிற்கு **நகர மன்ற தீர்மானஎண்**. 1096, **நாள்**. 29.11.2024**ல் அனுமதி** பெறப்பட்டு 16.09.2025 **அன்று முதல் அழைப்பில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளைக் கொண்டு ஒப்பு நோக்குப்பட்டியல் தயார் செய்து மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது**.

| **வரிசை எண்** | **ஒப்பந்ததாரரின் பெயர்** | **தொகை விகிதம்** |
|---|---|---|
| 1 | **திரு.ஜெயராம்** | 0.04 %**குறைவு** |
| 2 | **திரு.நாராயணமூர்த்தி** | 0.21 %**அதிகம்** |

குன்னூர் நகராட்சிக்குட்பட்ட வார்டுஎண்.20ல் மாடல்ஹவுஸ் பகுதியில் நகராட்சி சொந்தமான குடியிருப்பு எண்.380 மற்றும் 381 குடியிருப்பை பராமரிக்க பணி மேற்கொள்ள **மதிப்பீட்டை விட** 0.04% **குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.கே.ஜெயராம் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது**.

**அ.கு :மன்றம் அனுமதி வழுங்கலாம்.**
**தீர்மானம் – அனுமதி வழுங்கப்பட்டது**

23.ந.க.எண்: இ4/0097/2024

குன்னூர் நகராட்சிக்குட்பட்ட வார்டுஎண்.29ல் காந்திபுரம் பகுதியில் புதியதாக கட்டப்பட்டுள்ள ஆரம்ப சுகாதார மையத்திற்கு கூடுதலாக மின்சார வசதி, குடிநீர் வசதி ஏற்படுத்தும் பணி மேற்கொள்ள ரூ.2.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு **நகர மன்ற தீர்மானஎண்**. 1390, **நாள்**. 30.07.2025**ல் அனுமதி** பெறப்பட்டு 16.09.2025 **அன்று முதல் அழைப்பில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளைக் கொண்டு ஒப்பு நோக்குப்பட்டியல் தயார் செய்து மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது**.

| **வரிசை எண்** | **ஒப்பந்ததாரரின் பெயர்** | **தொகை விகிதம்** |
|---|---|---|
| 1 | **திரு.ஆர்.சரவணக்குமார்** | 0.30 %**அதிகம்** |
| 2 | **திரு**.V.S.**மாதேஸ்** | 0.04 % **குறைவு** |

குன்னூர் நகராட்சிக்குட்பட்ட வார்டுஎண்.29ல் காந்திபுரம் பகுதியில் புதியதாக கட்டப்பட்டுள்ள ஆரம்ப சுகாதார மையத்திற்கு கூடுதலாக மின்சார வசதி, குடிநீர் வசதி ஏற்படுத்தும் பணி மேற்கொள்ள **மதிப்பீட்டை விட** 0.04% **குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு**.V.S.**மாதேஸ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது**.

**அ.கு :மன்றம் அனுமதி வழங்கலாம்.**
**தீர்மாணம் – அனுமதி வழங்கப்பட்டது**

24.ந.க.எண்: இ4/0097/2024

குன்னூர் நகராட்சி அலுவலக நுழைவு வாயிலில் ஒளிரும் பெயர் பலகை அமைக்கும் பணிக்கு ரூ.4.50 இலட்சம் மதிப்பீட்டிற்கு **நகர மன்ற தீர்மானஎண்**. 836, **நாள்**. 16.02.2024**ல் அனுமதி** பெறப்பட்டு 16.09.2025 **அன்று முதல் அழைப்பில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளைக் கொண்டு ஒப்பு நோக்குப்பட்டியல் தயார் செய்து மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது**.

| **வரிசை எண்** | **ஒப்பந்ததாரரின் பெயர்** | **தொகை விகிதம்** |
|---|---|---|
| 1 | **திரு.ஆர்.சரவணக்குமார்** | 0.01 %**அதிகம்** |
| 2 | **திரு**.V.S.**மாதேஸ்** | 0.001 % **குறைவு** |

குன்னூர் நகராட்சிக்குட்பட்ட வார்டுஎண்.29ல் காந்திபுரம் பகுதியில் புதியதாக கட்டப்பட்டுள்ள ஆரம்ப சுகாதார மையத்திற்கு கூடுதலாக மின்சார வசதி, குடிநீர் வசதி ஏற்படுத்தும் பணி மேற்கொள்ள **மதிப்பீட்டை விட** 0.001% **குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு**. V.S.**மாதேஸ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது**.

**அ.கு :மன்றம் அனுமதி வழங்கலாம்.**
**தீர்மாணம் – அனுமதி வழங்கப்பட்டது**

25. ந.க.எண்: இ4/0097/2024

குன்னூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.16 ஸ்டேட் வங்கி முதல் ஓட்டுப்பட்டரை சாலை வரை உள்ள நடைபாதை மற்றும் மழைநீர் வடிகால் சீரமைக்கு பணிக்கு ரூ.12.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு **நகர மன்ற தீர்மானஎண்**. 1394, **நாள்**. 30.07.2025**ல் அனுமதி பெறப்பட்டு** 16.09.2025 **அன்று முதல் அழைப்பில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளைக் கொண்டு ஒப்பு நோக்குப்பட்டியல் தயார் செய்து மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது**.

| வரிசை எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | தொகை விகிதம் |
|---|---|---|
| 1 | **திரு.கருப்புசாமி** | 0.22 %**அதிகம்** |
| 2 | Hill Construction PVT LTD | 0.03 % **குறைவு** |

குன்னூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.16 ஸ்டேட் வங்கி முதல் ஓட்டுப்பட்டரை சாலை வரை உள்ள நடைபாதை மற்றும் மழைநீர் வடிகால் சீரமைக்கும் பணி மேற்கொள்ள **மதிப்பீட்டை விட** 0.03% **குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள** Hill Construction PVT LTD **அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது**.

**அ.கு :மன்றம் அனுமதி வழங்கலாம்.**
**தீர்மானம் – அனுமதி வழங்கப்பட்டது**

26.ந.க.எண்: இ4/0097/2024

குன்னூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.09 கான்வால் சாலை நகராட்சி குடியிருப்பு கதவு எண்.35ல் மராமத்து பணி மேற்கொள்ளும் பணிக்கு ரூ.9.85 இலட்சம் மதிப்பீட்டிற்கு **நகர மன்ற தீர்மானஎண்**. 1135, **நாள்**. 29.11.2024**ல் அனுமதி பெறப்பட்டு** 16.09.2025 **அன்று முதல் அழைப்பில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளைக் கொண்டு ஒப்பு நோக்குப்பட்டியல் தயார் செய்து மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது**.

| வரிசை எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | தொகை விகிதம் |
|---|---|---|
| 1 | **திரு.ஆர்.சரவணக்குமார்** | 0.10 %**குறைவு** |
| 2 | **திரு.**V.S.**மாதேஸ்** | 0.29 % **அதிகம்** |

குன்னூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.09 கான்வால் சாலை நகராட்சி குடியிருப்பு கதவு எண்.35ல் மராமத்து பணி மேற்கொள்ளும் பணிக்கு **மதிப்பீட்டை விட** 0.10% **குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.ஆர்.சரவணக்குமார் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது**.

**அ.கு :மன்றம் அனுமதி வழங்கலாம்.**
**தீர்மானம் – அனுமதி வழங்கப்பட்டது**

27.ந.க.எண்: இ4/0097/2024

குன்னூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.23 அட்டடி சாலை நகராட்சி நடுநிலைப்பள்ளியில் மதிய உணவு உண்ணும் அறை மற்றும் தடுப்பச்சுவர் மராமத்துப்பணி ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு **நகர மன்ற தீர்மானஎண்**. 1346, **நாள்**. 28.05.2025**ல் அனுமதி பெறப்பட்டு** 16.09.2025 **அன்று முதல் அழைப்பில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளைக் கொண்டு ஒப்பு நோக்குப்பட்டியல் தயார் செய்து மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது**.

| வரிசை எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | தொகை விகிதம் |
|---|---|---|
| 1 | **திரு.நாராயணமூர்த்தி** | 0.52 % **அதிகம்** |
| 2 | **திரு.ஜெயராம்** | 0.04 % **குறைவு** |

குன்னூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.23 அட்டடி சாலை நகராட்சி நடுநிலைப்பள்ளியில் மதிய உணவு உண்ணும் அறை மற்றும் தடுப்பச்சுவர் மராமத்துப்பணிக்கு **மதிப்பீட்டை விட** 0.04% **குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.ஜெயராம் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது**.

**அ.கு :மன்றம் அனுமதி வழங்கலாம்.**
**தீர்மானம் – அனுமதி வழங்கப்பட்டது**

28. ந.க.எண்: இ4/0097/2024

குன்னூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.05 வண்ணாரப்பேட்டை பகுதியில் சமுதாய கூடம் இல்லாத காரணத்தினால் அப்பகுதியில் உள்ள பழைய பள்ளி கட்டிடத்தினை மறுசீரமைப்பு பணி மேற்கொள்ள ரூ.8.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு **நகர மன்ற தீர்மான எண்**. 1361, **நாள்**. 30.07.2025**ல் அனுமதி பெறப்பட்டு** 16.09.2025 **அன்று முதல் அழைப்பில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளைக் கொண்டு ஒப்பு நோக்குப்பட்டியல் தயார் செய்து மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது**.

| வரிசை எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | தொகை விகிதம் |
|---|---|---|
| 1 | **திரு.நாராயணமூர்த்தி** | 0.59 %**அதிகம்** |
| 2 | **திரு.ஜெயராம்** | –1.34% **குறைவு** |

குன்னூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.05 வண்ணாரப்பேட்டை பகுதியில் சமுதாய கூடம் இல்லாத காரணத்தினால் அப்பகுதியில் உள்ள பழைய பள்ளி கட்டிடத்தினை மறுசீரமைப்பு பணி மேற்கொள்ள மேற்கொள்ள **மதிப்பீட்டை விட** – 1.34% **குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.ஜெயராம் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது**.

**அ.கு :மன்றம் அனுமதி வழங்கலாம்.**
**தீர்மானம் – அனுமதி வழங்கப்பட்டது**

**29. ந.க.எண்: இ4/0097/2024**

குன்னூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.23ல் கான்வால்ரோடு பகுதியிலுள்ள நடைபாதை மற்றும் மழை நீர் வடிகால் பழுதடைந்துள்ள காரணத்தினால் பொதுமக்கள் இப்பாதையை பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. எனவே மேற்படி பழுதடைந்துள்ள நடைபாதை மற்றும் மழைநீர் வடிகால்யை மறு சீரமைக்கும் பணி மேற்கொள்ள ரூ.13,00,000/-க்கு மதிப்பீட்டு தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணியின் அவசியத்தைக்கருத்தில் கொண்டு இப்பணியை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு :மன்றம் அனுமதி வழங்கலாம்.**
**தீர்மாணம் – அனுமதி வழங்கப்பட்டது**

30. **ந.க.எண்: இ4/0097/2024**

குன்னூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.09ல் **E.B.** அலுவலகம் பகுதியிலுள்ள நடைபாதை மற்றும் மழைநீர் வடிகால்மூடி பழுதடைந்துள்ள காரணத்தினால் பொதுமக்கள் இப்பாதையை பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. எனவே மேற்படி பழுதடைந்துள்ள நடைபாதை மற்றும் மழைநீர் வடிகால்மூடி மறுசீரமைக்கும் பணி மேற்கொள்ள ரூ.10,00,000/-க்கு மதிப்பீட்டு தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணியின் அவசியத்தைக்கருத்தில் கொண்டு இப்பணியை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு :மன்றம் அனுமதி வழங்கலாம்.**
**தீர்மாணம் – அனுமதி வழங்கப்பட்டது**

**31. ந.க.எண்: இ4/0097/2024**

குன்னூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.04ல் ஜாய்ஸ் ஹோட்டல் பகுதியிலுள்ள நடைபாதை பழுதடைந்துள்ள காரணத்தினால் பொது மக்கள் இப்பாதையை பயன்படுத்த முடியாத நிலையில்உள்ளது. எனவே மேற்படி பழுதடைந்துள்ள நடைபாதையை மறு சீரமைக்கும் பணி மேற்கொள்ள ரூ.2,00,000/-க்கு மதிப்பீட்டு தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணியின் அவசியத்தைக்கருத்தில் கொண்டு இப்பணியை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு :மன்றம் அனுமதி வழங்கலாம்.**
**தீர்மாணம் – அனுமதி வழங்கப்பட்டது**

**32. ந.க.எண்: இ4/0097/2024**

குன்னூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.13ல் வண்ணாரப்பேட்டை சண்முகாபுரம் பகுதியிலுள்ள நடைபாதை மற்றும் தடுப்புச்சுவர் பழுதடைந்துள்ள காரணத்தினால் பொதுமக்கள் இப்பாதையை பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. எனவே மேற்படி பழுதடைந்துள்ள நடைபாதை மற்றும் தடுப்புச்சுவரையை மறு சீரமைக்கும் பணி மேற்கொள்ள ரூ.12,00,000/-க்கு மதிப்பீட்டு தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணியின் அவசியத்தைக்கருத்தில் கொண்டு இப்பணியை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு :மன்றம் அனுமதி வழங்கலாம்.**
**தீர்மாணம் - அனுமதி வழங்கப்பட்டது**

**33. ந.க.எண்: இ4/0097/2024**

குன்னூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 11 பழைய மருத்துவமனை பகுதியில் ஓடை அடுத்துள்ள பகுதியில் மண்சரிவு ஏற்படும் காரணத்தினால் புதியதாக தடுப்புச்சுவர் அமைக்கும் பணி மேற்கொள்ள ரூ. 15,00,000/-க்கு மதிப்பீட்டு தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணியின் அவசியத்தைக்கருத்தில் கொண்டு இப்பணியை நகராட்சி பொது நிதியின்கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு :மன்றம் அனுமதி வழங்கலாம்.**
**தீர்மாணம் - அனுமதி வழங்கப்பட்டது**

**34. ந.க.எண்: இ4/0097/2024**

குன்னூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.03ல் எம்.ஜி.ஆர் நகர் பகுதியிலுள்ள நடைபாதை மற்றும் மழைநீர் வடிகால் பழுதடைந்துள்ள காரணத்தினால் பொதுமக்கள் இப்பாதையை பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. எனவே மேற்படி பழுதடைந்துள்ள நடைபாதை மற்றும் மழைநீர் வடிகால்யை மறு சீரமைக்கும் பணி மேற்கொள்ள ரூ.10,00,000/-க்கு மதிப்பீட்டு தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணியின் அவசியத்தைக்கருத்தில் கொண்டு இப்பணியை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு :மன்றம் அனுமதி வழங்கலாம்.**
**தீர்மாணம் - அனுமதி வழங்கப்பட்டது**

**35. ந.க.எண்: இ4/0097/2024**

குன்னூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.02ல் சாந்தி விஜயா பள்ளி அருகிலுள்ள மழைநீர் வடிகால் முழுவதுமாக பழுதடைந்துள்ள காரணத்தினால் மழைநீர் சாலைகளில் வழிந்தோடுவதால் பொது மக்கள் இப்பாதையை பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. மேற்படி பணி மேற்கொள்ள ரூ. 25,00,000/-க்கு மதிப்பீட்டு தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணியின் அவசியத்தைக்கருத்தில் கொண்டு இப்பணியை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தில் பொருள் வைக்க ஆணையர் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு :மன்றம் அனுமதி வழங்கலாம்.**
**தீர்மானம் – அனுமதி வழங்கப்பட்டது**

**36. ந.க.எண்.25/2034/எச்2**

இந்நகராட்சியில் பணிபுரிந்து வரும் தூய்மை பணியாளர்கள், துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் அலுவலக உதவியாளர்கள், கடைநிலைப் பணியாளர்கள் மற்றும் இரவு காவலர்கள் ஆகிய பணியாளர்களுக்கு 2025-2026ம் நிதி ஆண்டிற்கான கம்பளிகள் ( WollenBlanket ) வாங்கி வழங்க வேண்டி உள்ளதால் அதற்குண்டான உத்தேச செலவினம் ரூ.1,50,000 ஆகும் மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு :மன்றம் அனுமதி வழங்கலாம்.**
**தீர்மானம் – அனுமதி வழங்கப்பட்டது**

**37. ந.க.எண்.2025/பி2**

குன்னூ நகராட்சி 2024-2025ம் ஆண்டு கணக்குகள் Reconcilation முடித்தமைக்கு திரு. P. ஆதீஷ்வரன் ( Account Consultation ) அவர்களுக்கு ரூ.1,75,000/- தொகை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு :மன்றம் அனுமதி வழங்கலாம்.**
**தீர்மானம் – அனுமதி வழங்கப்பட்டது**

**38. ந.க.எண்.1269/2025/இ4**

குன்னூர் நகராட்சிக்குட்பட்ட காந்திபுரம் நகராட்சி நடுநிலைப்பள்ளியில் Bery Buddy Fountation அவர்கள் தற்போதுள்ள CRO கட்டிடத்தின் மேலே இரண்டு புதிய வகுப்பறைகளை தனது சொந்த செலவிலேயே கட்டி தருவதாக தெரிவித்துள்ளார்கள். எனவே மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

**அ.கு :மன்றம் அனுமதி வழங்கலாம்.**
**தீர்மானம் – அனுமதி வழங்கப்பட்டது**

**39. ந.க.எண்.1269/2025/இ4**

குன்னூர் நகராட்சிக்குட்பட்ட 15 – வது வார்டில் முத்தாலம்மன் தெருவில் சமுதாயக்கூடம் அமைப்பதற்கு சட்டமன்ற உறுப்பின தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2023–2024ன் கீழ் ரூ.15.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. மேற்கண்ட இடத்தில் மண்தரை சாய்தளமாக உள்ள காரணத்தனில் தடுப்புச்சுவர் அமைத்து பிறத சமுதாயக்கூடம் அமைக்கப்பட்டது. மேற்படி மதிப்பீட்டில் தடுப்புச்சுவர் அமைக்க வழிவகை செய்யப்படவில்லை. எனவே கமுதாயபக்கூடம் முழுமையாக அமைப்பதற்கும், சமையல் அறை கட்டிடம் அமைப்பதற்கும், படிக்கட்டுகள் அமைப்பதற்கும் மற்றும் கழிவறைக் கட்டிடம் அமைப்பதற்கும் மற்றும் பயணிகள் நிழற்குடை அமைப்பதற்கும் கூடதலாக ரூ.14.80 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டது. எனவே நிர்வாக அனுமதி பெறுவதற்கும் மற்றும் செலவீனத் தொகையை பொதுநிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்றப்பொருள் வைப்பதற்கு மன்றத்தின்அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு :மன்றம் அனுமதி வழங்கலாம்.**
**தீர்மானம் – அனுமதி வழங்கப்பட்டது**

**40. ந.க.எண்.2025/இ2**

குன்னூர் நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு வாகனங்கள் அடிக்கடி பழுது ஏற்ப்படுவதினால் பழுதுபார்க்கும் பணி மேற்கொள்ள உத்தேச செலவினம் ரூ.3.00 இலட்சம் மதிப்பீடப்பட்டுள்ளது. இப்பணியினை நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு :மன்றம் அனுமதி வழங்கலாம்.**
**தீர்மானம் – அனுமதி வழங்கப்பட்டது**

**41. ந.க.எண்.2025/இ4**

குன்னூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.**15**ல் முத்தாலம்மன் கோவில் பகுதியிலுள்ள நடைபாதை பழுதடைந்துள்ள காரணத்தினால் பொதுமக்கள் இப்பாதையை பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. எனவே மேற்படி பழுதடைந்துள்ள நடைபாதையை மறு சீரமைக்கும் பணி மேற்கொள்ள ரூ.**10,00,000/–**க்கு மதிப்பீட்டு தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணியின் அவசியத்தைக்கருத்தில் கொண்டு இப்பணியை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு :மன்றம் அனுமதி வழங்கலாம்.**
**தீர்மானம் – அனுமதி வழங்கப்பட்டது**

42. ந.க.எண்.2025/இ4

குன்னூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.05ல் குப்பீஸ்வரர் கோவில் பகுதியிலுள்ள நடைபாதை மற்றும் மழைநீர் வடிகால் பழுதடைந்துள்ள காரணத்தினால் பொதுமக்கள் இப்பாதையை பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. எனவே மேற்படி பழுதடைந்துள்ள நடைபாதை மற்றும் மழைநீர் வடிகால்யை மறு சீரமைக்கும் பணி மேற்கொள்ள ரூ.5,00,000/−க்கு மதிப்பீட்டு தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணியின் அவசியத்தைக்கருத்தில் கொண்டு இப்பணியை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு :மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**தீர்மாணம் – அனுமதி வழங்கப்பட்டது**

43. ந.க.எண்.2025/இ4

குன்னூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.02ல் புல்மோர்ஸ் பள்ளி அருகிலுள்ள நடைபாதை மற்றும் மழைநீர் வடிகால் பழுதடைந்துள்ள காரணத்தினால் பொதுமக்கள் இப்பாதையை பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. எனவே மேற்படி பழுதடைந்துள்ள நடைபாதை மற்றும் மழைநீர் வடிகால்யை மறு சீரமைக்கும் பணி மேற்கொள்ள ரூ.5,00,000/−க்கு மதிப்பீட்டு தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணியின் அவசியத்தைக்கருத்தில் கொண்டு இப்பணியை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு :மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**தீர்மாணம் – அனுமதி வழங்கப்பட்டது**

44. ந.க.எண்.2025/இ4

குன்னூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.30ல் கன்னிமாரியம்மன் கோவில் பகுதியில் 1832ம் ஆண்டில் இராணுவத்தை சார்ந்த முன்னோடிகள் லெப்டினன்ட் லேஹர்டி அவர்களால் 132 வது மைல்கல் உருவாக்கப்பட்டுள்ளது. இச்சாலையானது கால்நடை வாகனங்கள் கோயமுத்தூர் முதல் உதகமண்டலம் வரை குன்னூர் வழியாக செல்ல அமைக்கப்பட்ட சாலையின் மையில்கல்லாகும். 132 வது கடைசி மைல்கல்லானது மாவட்ட ஆட்சியர் முன்னிலையில் ஜுன் 11ம் நாள் 2025ல் மறுசீரமைக்கப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களின் அறிவுரையின் படி இப்புராதன 132வது கடைசி மையில்கல்லினை அழகுபடுத்தி பொதுமக்கள் மற்றும் சுற்றுலா பயணிகளின் பார்வைக்கு வைக்க ரூ.3.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார்செய்யப்பட்டுள்ளது. இப்பணியின் அவசியத்தைக்கருத்தில் கொண்டு இப்பணியை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு :மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**தீர்மாணம் – அனுமதி வழங்கப்பட்டது**

45. ந.க.எண். 1836/2024/ இ4

குன்னூர் நகராட்சி 1866ல் நகராட்சியாக தோற்றுவிக்கப்பட்டு 158 வருடம் பழமையான நகராட்சியாகும். குன்னூர் நகராட்சியில் தற்போதைய மக்கள் தொகை 47366 ஆகும். இந்நகரின் மொத்த பரப்பளவு 15,05 சதுர கிலோ மீட்டர் ஆகும். இந்நகராட்சி 30 வார்டுகளாக பிரிக்கப்பட்டு நிர்வகிக்கப்பட்டு வருகிறது. குன்னூர் நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகள் புவியியல் அமைப்பு ரீதியாக மலைப்பாங்கான நகரமாகும். இங்கு மிகவும் செங்குத்தான பகுதிகளாகவும். குறுகலான இடங்களும் மற்றும் பள்ளமான பகுதிகளுமாக அமைந்துள்ளது. பல ஆண்டுகளுக்கு முன்னர் குடிநீர் குழாய்கள் நடைபாதைகளில் பதிக்கப்பட்டு குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. நடைபாதைகளில் குடிநீர் குழாய்கள் பதிக்கப்பட்டதினால் நடைபாதை குறுகலாகி பொதுமக்கள், பள்ளி குழந்தைகள் நடப்பதற்கு வசதி இல்லாமல் மிகவும் சிரமத்திற்கு ஆளாகியுள்ளார்கள். மேலும் 30 வார்களிலும் சீரான முறையில் குடிநீர் கிளை குழாய்கள் இல்லாத காரணத்தினாலும், பல்வேறு பகுதிகளில் உள்ள குடியிருப்புகளுக்கு புதிய குடிநீர் இணைப்பு வழங்க இயலாது நிலை ஏற்ப்பட்டுள்ளது. ஆகவே, இதனை சரிசெய்யும் விதமாக 30 வார்டு பகுதிகளிலும் புதிய குடிநீர் பிரதான குழாய்கள் மற்றும் கிளை குழாய் பதித்து ஒரே சீரான முறையில் குடியிருப்புகளுக்கு குடிநீர் விநியோகம் செய்ய ரூ. 5900.00 இலட்ச மதிப்பீட்டிற்கு தனியரர் ஆலோசகர் ( Consultant ) மூலம் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. இவ்விரிவான திட்ட அறிக்கைக்கும், மேற்காணும் திட்டத்திற்கு அம்ரூத் 2.0 திட்டத்தில் முழு மானியமாக அரசு நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்க கோரி விரிவான திட்ட அறிக்கையுடன் அரசுக்கு முன்மொழிவுகள் சமர்ப்பிக்கவும் மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : குன்னூர் நகராட்சி குடிநீர் விநியோக அபிவிருத்தி பணியின் அத்தியாவசியத்தினை கருத்தில் கொண்டு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.**
**தீர்மானம் – அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது**

46. ந.க.எண். 1836/2024/ இ4

குன்னூர் நகராட்சிக்கு ரேலியா அணை முக்கிய நீர் ஆதாரமாக விளங்குகிறது. ரேலியா அணையின் மொத்த பரப்பளவு 540 ஏக்கர் ஆகும். அணையின் மொத்த உயரம் 43.'6' அடி அணையின் நீளம் 186 மீட்டர், அகலம் 11.80 மீட்டர், மேல்தளம் 1.20 மீட்டர் நீர்பரவல் பகுதி 5.66 ஹெக்டர் மற்றும் கொள்ளவு 36 மில்லியன் கேலன்ஸ் மற்றும் நீர் பிடிப்பு பகுதி 125.33 ஹெக்டர் ஆகும். கடந்த மாதங்களில் மழை இல்லாத கரணத்தினால் ரேலியா அணையின் நீர் மட்டம் 20 அடியாக குறைந்து அணை வறண்டு காணப்படுகிறது. இந்த வறண்ட சூழ்நிலையை ஒரு வாய்ப்பாகக் கொண்டு வறண்ட நீர் பிடிப்பு பகுதியில் தேங்கியுள்ள சேர் மற்றும் சகதிகளை அகற்றி அணையினை ஆழப்படுத்தி மலைகாலத்தில் அதிகளவு நீர் சேமிக்க ஏதுவாக வறண்ட நீர்பிடிப்பு பகுதியில் உள்ள சேர் மற்றும் சகதிகளை ஜே.சி.பி இயந்திரம் மற்றும் இட்டாச்சி கொண்டு தூர்வார ரூ.40.00 இலட்சத்திற்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளது. பணியின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு இப்பணியினை திருவாளர் ஹில்டாப் கன்ஸ்டிரக்ஸ்சன் மூலம் மேற்கொள்ள பணிவுத்திரவு

வழங்கவும் மேற்படி பணியினை குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு :மன்றம் அனுமதி வழங்கலாம்.**
**தீர்மானம் – அனுமதி வழங்கப்பட்டது**

**47. ந.க.எண். 1836/2024/ இ4**

குன்னூர் நகராட்சி 1866ல் நகராட்சியாக தோற்றுவிக்கப்பட்டு 158 வருடம் பழமையான நகராட்சியாகும். குன்னூர் நகராட்சியில் தற்போதைய மக்கள் தொகை 47366 ஆகும். இந்நகரின் மொத்த பரப்பளவு 15,05 சதுர கிலோ மீட்டர் ஆகும். இந்நகராட்சி 30 வார்டுகளாக பிரிக்கப்பட்டு நிர்வகிக்கப்பட்டு வருகிறது. குன்னூர் நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகள் புவியியல் அமைப்பு ரீதியாக மலைப்பாங்கான நகரமாகும். இங்கு மிகவும் செங்குத்தான பகுதிகளாகவும். குறுகலான இடங்களும் மற்றும் பள்ளமான பகுதிகளுமாக அமைந்துள்ளது. பல ஆண்டுகளுக்கு முன்னர் குடிநீர் குழாய்கள் நடைபாதைகளில் பதிக்கப்பட்டு குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. நடைபாதைகளில் குடிநீர் குழாய்கள் பதிக்கப்பட்டதினால் நடைபாதை குறுகலாகி பொதுமக்கள், பள்ளி குழந்தைகள் நடப்பதற்கு வசதி இல்லாமல் மிகவும் சிரமத்திற்கு ஆளாகியுள்ளார்கள். மேலும் 30 வார்களிலும் சீரான முறையில் குடிநீர் கிளை குழாய்கள் இல்லாத காரணத்தினாலும், பல்வேறு பகுதிகளில் உள்ள குடியிருப்புகளுக்கு புதிய குடிநீர் இணைப்பு வழங்க இயலாது நிலை ஏற்ப்பட்டுள்ளது. ஆகவே, இதனை சரிசெய்யும் விதமாக 30 வார்டு பகுதிகளிலும் புதிய குடிநீர் பிரதான குழாய்கள் மற்றும் கிளை குழாய் பதித்து ஒரே சீரான முறையில் குடியிருப்புகளுக்கு குடிநீர் விநியோகம் செய்ய தனியரர் ஆலோசகர் ( Consultant ) மூலம் விரிவான திட்ட அறிக்கை தயார் செய்ய பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் திட்ட மதிப்பீட்டில் 1.50% குறைவாக விலைப்புள்ளி அளித்துள்ள M/s. Glancy Docmra Consultamts India Pvt. Ltd., அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று பணிவுத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு :மன்றம் அனுமதி வழங்கலாம்.**
**தீர்மானம் – அனுமதி வழங்கப்பட்டது**

ஓம். திருமதி. எம். சுசீலா
**தலைவர்**
**குன்னூர் நகராட்சி**

**/உண்மை நகல் /**

**ஆணையாளர்**
**குன்னூர் நகராட்சி**